தினமணி (27.08.2019)

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் இலவச கண் பரிசோதனை




முகாமைத் தொடக்கி வைத்து பார்வையிடும் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மைப் பொதுமேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன், முதன்மை பொதுமேலாளர் (வணிகம் மற்றும் மின்சாரம் மற்றும் கருவியியல்) பாலசுப்ரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி)தங்கராசு உள்ளிட்டோர்.

**கரூர், ஆக. 26:** புகழூரில் காகித ஆலை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, மாவட்டப் பார்வையிழப்புத் தடுப்புச் சங்கம் சார்பில் புகழூர் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள காகிதபுரம், பு.புகழூர், பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சிகள் மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகழூர் ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்களுக்காக இலவச கண் பரிசோதனை முகாம் ஞாயிற்றுக்கிழமை காகித ஆலை சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது.

முகாமை ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் தொடக்கி வைத்தார். இதில் கண் விழித்திரையில் பார்வையிழப்பு (சர்க்கரை நோய் காரணமாக), பிறவி கண்புரை, பிறவி கண்நீர் அழுத்த நோய், கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து, கண் எரிச்சல், கண் வலி, கண்ணின் கருவிழியில் புண், கண் பார்வைக் குறைபாடு, குழந்தைகளின் கண் நோய் மற்றும் இதர கண் சம்பந்தமான நோய்களுக்கு இலவச பரிசோதனை செய்யப்பட்டது.

முகாமில் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து குறைபாடுகொண்ட 353 பேருக்கு ரூ. 90,000 மதிப்பிலான மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மேலும் 58 பேருக்கு கண்புரை கண்டறியப்பட்டு, முகாம் தினத்தன்றே அறுவைச் சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முகாமில் ஆலையின் முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன், முதன்மைப் பொது மேலாளர் (வணிகம் மற்றும் மின்சாரம் மற்றும் கருவியியல்) பாலசுப்ரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.